Government of Western Australia
Mental Health Commission

12 ஏ படிவத்தில் ஒப்பமிடுவதன் மூலம் குறித்த நபரின் நியமிக்கப்பட்ட ஒருவராக இருக்க நீங்கள் இணங்குகிறீர்கள்.

அந்த நோயாளரின் சிகிச்சை, கவனிப்பு தொடர்பான விடயங்கள் பற்றிய தகவல்களைப் பெறுவதற்கும், அதில் ஈடுபாடு கொள்ளவும் ஒரு நியமிக்கப்பட்ட ஆளாக நீங்கள் தகுதியுடையவராவீர்கள். குறிப்பிட்ட சில விடயங்களில் உங்களை ஈடுபடுத்துவதோ அல்லது குறிப்பிட்ட சில விடயங்களை உங்களுடன் பகிர்ந்துகொள்வதோ நோயாளரின் சிறப்பான நன்மைக்காகாது என நோயாளரின் மன நோய் மருத்துவர் முடிவுசெய்தாலன்றி, பணியாளர் இந்தத் தகவலுடன் உங்களைத் தொடர்பு கொள்வார்.

இனிமேலும் நீங்கள் நோயாளியின் நியமிக்கப்பட்ட ஆளாக இருக்ககமாட்டீர்கள் என்பதனை எழுத்தில் அறிவித்து, இதனைக் கையெழுத்திடுவதன் மூலம் நீங்கள் எந்த நேரமும் நியமிக்கப்பட்ட ஆளாக இராஜினாமாச் செய்யலாம். நீங்கள் இனிமேல் நியமிக்கப்பட்ட ஆள் அல்ல என்பதை ஒரு பணியாள் உறுப்பினருக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

ஒரு நியமிக்கப்பட்ட ஆளாக, நீங்கள் நோயாளரின் 'தனிப்பட்ட உதவியாளர்களில் ஒருவராவீர்கள்' மற்றும் நோயாளருடைய பராமரிப்பாளர் அல்லது நெருங்கிய குடும்ப உறுப்பினருக்குரிய அதே உரிமைகளைக் கொண்டிருப்பீர்கள். தனிப்பட்ட உதவியாளர்களின் உரிமைகள் பற்றி அதிகளவில் அறிந்துகொள்ள, 'தனிப்பட்ட உதவியாளருக்கான தகவல்கள்' தலைப்புடனான பிரசுரத்தைப் பார்க்கவும்.

## மேலும் தகவல்கள்

இந்தப் பிரசுரத்திலுள்ள தகவல்கள், உளநலச் சட்டம் 2014 இல் விபரிக்கப்பட்ட சட்டங்களுடன் தொடர்புடையதாகும்.

- பரிசோதனை ஒன்றிற்காக மனநோய் வைத்தியருக்குச் சிபாரிசு செய்தல்
- தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளருக்கான வழிமுறைகள்.
- சமூகச் சிகிச்சை வழிமுறைகள்
- தானாக விரும்பி வரும் நோயாளருக்கான தகவல்கள்
- மன வருத்தத்திற்கான மருத்துவத்தைப் பெறுதல்
- தனிப்பட்ட உதவியாளர்களுக்கான தகவல்கள்
- நியமிக்கப்பட்டவர்கள்: நியமனம் செய்வது எவ்வாறு அத்துடன் அதன் அர்த்தம் என்ன.

## ஏனைய பிரசுரங்கள் கிடைக்குமிடம்:

- உள நல நியாய மன்று
- உள நல ஆதரவு சேவை
- உள நல சட்ட நிலையம்

உள நல சட்டம் 2014 பற்றி அதிக தகவல்களுக்கும், ஏனைய வழி வகைகளுக்கும் வருகை தரவும், மன நல ஆணைய இணையத்தளம்: www.wa.gov.au
or phone (08) 6272 1200

This document can be made available in other languages and alternative formats on request.

Published by the Mental Health Commission (2015)

# நியமிக்கப்பட்ட ஆட்கள்:

# எவ்வாறு ஒரு நியமனத்தை மேற்கொள்வது அத்துடன் அது எதனைக் கருதுகிறது



**ஒருவரை எவ்வாறு உங்கள் நியமிக்கப்பட்ட ஆளாகக்குவது அத்துடன் இது எதனைக்கருதுகிறது குறித்த தகவல்களை இந்தப் பிரசுரம் தருகிறது. உளநலச் சட்டம் 2014 இன் கீழ் நியமிக்கப்பட்டவர்களின் பங்களிப்பு மற்றும் அவர்களது உரிமைகள் பற்றிய தகவல்களையும் இது வழங்குகிறது.**

பராமரிப்பாளரதும், நெருங்கிய உறவினரதும் பங்களிப்பு நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு நோயாளரின் சிகிச்சையிலும், பராமரிப்பிலும் அவர்கள் தகவல் பெறவும், ஈடுபடுத்தப்படவும் உரிமையுடையவர்களாவர்.

உங்களைக் கவனிப்பவர் அல்லாத அல்லது நெருங்கிய உறவினரல்லாத யாரோ ஒருவர் உங்களுக்கு இருக்கக்கூடும் (உதாரணமாக ஒரு நண்பர்), ஆனால் உங்கள் சிகிச்சையிலும், பராமரிப்பிலும் அவர்களுக்கு ஒரு பங்களிப்பு இருக்கிறது என்பது உங்களுக்கு முக்கியமாகும்.

## உங்களது நியமிக்கப்பட்ட ஆளின் பொறுப்பு

நீங்கள் நோயாளியாக இருக்கும்போது, உங்களது உரிமைகள் நிலை நிறுத்தப்படுவதனையும், உங்களது தேவைகளும் விருப்பக்களும் கவனிக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு உங்களுக்கு உதவுவதுதான் உங்களது நியமிக்கப்பட்டவரின் பொறுப்பாகும்.

சிகிச்சைக்கான தெரிவுகள் மற்றும் பராமரிப்பு அத்துடன் உங்களுக்கு ஆதரவு வழங்குவதனை எண்ணிப்பார்ப்பது அடங்கலாக உங்கள் நியமிக்கப்பட்ட ஆள் வழக்கமாக உங்கள் சிகிச்சை மற்றும் பாராமரிப்பில் ஈடுபடுத்தப்படுவார்.

பின்வருவன பற்றிய தகவல்கள் உங்கள் நியமிக்கப்பட்ட ஆளுக்கு வழங்கப்படும்:

- உங்கள் மனநோய், சிகிச்சை மற்றும் பராமரிப்புக்கான தெரிவுகள் அத்துடன் வழங்கப்படும் ஏதாவது சிகிச்சைக்கான உங்கள் பதில்கள்
- கட்டாய சிகிச்சைக் கட்டளை பிறப்பிக்கப்பட்டதற்கான காரணங்கள்
- உங்கள் தேவைகளை நிறைவு செய்யக் கிடைக்கும் சேவைகள்.

மன நோய் வைத்தியர், இது உங்கள் மேலான நன்மைக்குத் தகாது எனக்கருதினால், உங்கள் நியமிக்கப்பட்ட ஆளுக்குச் சில குறிப்பிட்ட விடயங்களை அறிவிக்கவோ/ அவரை அதில் ஈடுபடுத்தவோ மாட்டார்.

## ஒரு நியமனத்தை யார் செய்ய முடியும்?

ஒரு குழந்தை உட்பட எந்த ஒரு நபரும் தமது நியமிக்கப்பட்ட ஆளாக, யாராவது ஒருவரை நியமிக்கலாம். ஆனாலும், நியமனம் என்றால் என்ன, அது எதனைக் கருதுகிறதுவென நீங்கள் விளங்கிக்கொள்ளக்கூடியவராக இருக்க வேண்டும்.

## யாரை நீங்கள் நியமிக்கலாம்?

உங்களுடைய நியமிக்கப்பட்ட ஆளாக இருக்குபடி நீங்கள் விரும்பிய எவரையும் நீங்கள் கேட்கலாம். எவ்வாறாயினும் அவர்கள் 18 அல்லது அதனிலும் கூடிய வயதையுடையவராயிருத்தல் அவசியம் என்பதுடன் நியமனத்தை அவர்கள் ஏற்கவேண்டும்.

## எவ்வாறு ஒரு நியமனத்தைச் செய்வது

நியமனம் ஒன்றைச் செய்வதற்கு - 12 ஏ படிவம் ஒன்றினை - நியமிக்கப்படுபவரைப் பெயர்குறிப்பிடல் - நீங்கள் பூர்த்தி செய்யவேண்டும். இந்தப் படிவத்தின் பிரதி ஒன்றை நீங்கள் ஊழியர்களிடம் கேட்கலாம் , அல்லது www.mhc.wa.gov.au இலிருந்து ஒரு பிரதியைப் பெறலாம்.

நீங்கள் மற்றும் உங்களால் நியமிக்கப்பட்டவர், இருவரும் இந்தப் படிவத்தில் ஒப்பமிடவேண்டும் அத்துடன் உஙகள் இருவரது கையொப்பங்களும் சான்றளிக்கப்பட வேண்டும். ஒரு மருத்துவர், தாதி, மருந்துக்கலவையாளர், ஆசிரியர், சமாதான நீதிவான் சான்றளிக்க அதிகாரம் பெற்றவர்களில் அடங்குவர்.

http://www.courts.dotag.wa.gov.au/_files/Professions_witness_statutory_declarations.pdf

நியமனம் பற்றி சிகிச்சை வழங்கும் சேவை க்கு நீங்கள் அறிவிக்க வேண்டும். பணியாளரின் உறுப்பினர் ஒருவர் உங்கள் நியமனப் பத்திரத்தின் ஒரு பிரதியை எடுத்து உங்களது மருத்துவ அறிக்கையுடன் வைப்பார்.



## எவ்வாறு ஒரு நியமனம் முடிவுக்கு வரலாம்?

உங்களுக்கு அறிவிக்கப்பட வேண்டிய ஏனைய உரிமைகளுக்கு மேலாக.

1. எந்த நேரத்திலும், எப்படியாயினும் ஒரு நியமனத்தை நீங்கள் முடிவுக்குக் கொண்டு வரலாம் (உதாரணமாக குறித்த நபர் இனிமேல் உங்களது நியமிக்கப்பட்டவரல்ல என பணியாளருக்குச் சொல்வதன் மூலம்).
2. ஒரு புதிய நியமனத்தை மேற்கொள்வதன் மூலமும் நீங்கள் அந்த நியமனத்தை முடிவுக்குக் கொண்டுவரலாம்.
3. எந்த ஒரு காரணத்திற்காகவும் உங்கள் நியமிக்கப்பட்ட ஆள் இராஜினாமாச் செய்யலாம்; அதை அவர் எழுத்தில் தரவேண்டும்.
4. நியமிக்கப்பட்டவர் தனது பொறுப்பை நிறைவேற்ற முடியாதவராக அல்லது எதிர்மறையான தாக்கத்தை உங்கள்மீது ஏற்படுத்துவதாக ஒரு உளநல தீர்ப்பாயம் முடிவுசெய்தால் அந்த நியமனத்தை அது முடிவுறுத்தலாம்.

## நியமிக்கப்பட்டவர்களுக்கான தகவல்கள்

அவர்கள் ஒரு நோயாளராக இருக்கும்போது அவர்களின் உரிமைகள் நிலை நிறுத்தப்படுவதனையும், அவர்களின் தேவைகள், விருப்பங்கள் கவனிக்கப்படுவதையும் உறுதிசெய்வதற்கு உதவுவதுதான் உங்களை நியமித்தவருக்கு ஒரு நியமிக்கப்பட்ட ஆளாக, உங்களது பொறுப்பாகும்.